குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.65/2019

அ.சா. 1

2024–ம் ஆண்டு மே 10–ம் தேதி வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி –01 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரித்திக்கா | ஜாதி | |
| கணவர் பெயர் | பிரபு | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.31 மணி,

Accused A1. Ramasamy present. A2. Kaliyamoorthy absent. Petition u/s 317 Cr.P.C filed and allowed. Advocate Mr. R.Kannan present for Accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை:**

1. நான் தாத்தியம்பட்டியில் குடியிருந்து கொண்டு தனியார் கல்லூரில் உதவி பேராசியராக வேலை செய்து வருகிறேன். கடந்த 14.08.2018 ம் தேதி தொளசம்பட்டியில் உள்ள ஸ்ரீ துளசி விகாஸ் மெட்ரிக் குலேசன் பள்ளியில் நான் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வந்தேன். அன்றைய தினம் மாலை 05.00 மணிக்கு பள்ளி முடித்து வீட்டிற்கு செல்வதற்காக TN 30 BT 0347 என்ற இருசக்கர வாகனத்தில் சென்ற போது பூம்பட்டி ஏரி வழியாக 5 வதுமைல் நோக்கி சென்று கொண்டு இருந்த போது பாலம் தாண்டி சிறிது தூரம் சென்ற போது எனக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் 2 நபர்கள் வந்து நான் கழுத்தில் அணிந்திருந்த 5 பவுன் செயினை பறித்து கொண்டு சென்று விட்டார்கள்.

2. நான் கீழே விழுந்து விட்டேன். நான் எழுந்து பார்ப்பதற்குள் அந்த நபர்கள் சென்றுவிட்டார்கள். 2 நபர்களும் கருப்பு இருசக்கர வாகனத்தில் தலைக்கவசம் அணிந்து வந்தார்கள். அவர்கள் வந்த இருசக்கர வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது. அதன்பின்பு சத்தம் கேட்டு அருகில் இருந்தவர்கள் வந்து பார்த்தார்கள். நான்

எனது கணவருக்கு தகவல் சொன்னேன்.

3. எனது கணவர் வந்தவுடன் தொளசம்பட்டி காவல் நிலையத்தில் இதுசம்பந்தமாக புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். (அந்த புகார் அ.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). 14.10.2018 ம் தேதி காவல் நிலையத்தில் இருந்து அழைத்து நகையை பறித்த நபர்களை பிடித்து விட்டதாகவும் நகையை அடையாளம் காட்ட வேண்டி அழைத்தார்கள். நானும் எனது கணவரும் காவல் நிலையம் சென்றோம்.

4. அப்போது கடலூரைச் சேர்ந்த ராமசாமி என்பவரை பிடித்து வைத்து இருந்தார்கள். போலீசார் அவர்களை விசாரித்த போது கலியமூர்த்தி என்பவரும் ராமசாமியும் சேர்ந்து இருசக்கர வாகனத்தில் வந்து என் நகையை பறித்ததாக போலீசாரிடம் ராமசாமி சொன்னார். போலீசாரிடம் நான் எனது செயினை அடையாளம் காட்டினேன். அதன்பின்பு நீதிமன்றத்தில் மனு செய்து எனது செயினை பெற்றுக் கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தங்க செயின் என்னுடையது தான். **(அந்த புகைப்படம் அ.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

5. தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரி ராமசாமி சம்பவத்தின் போது இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து வந்து என்னிடம் நகையை பறித்த நபர். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

6. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: 01.45 மணி,

ஓம்/– எஸ்.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.